**செய்தி வெளியீடு எண் : 1640** **நாள் : 20.09.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

**<u>இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது விசைப்படகுகளையும் விரைவில் விடுவிக்க வலியுறுத்தி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (20-9-2022) எழுதியுள்ள கடிதம்.</u>**

இலங்கை கடற்படையினரால் 20.09.2022 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 8 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதையும், அவர்களின் விசைப்படகு பறிமுதல் செய்யப்பட்டதையும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும், இதுதவிர, ஏற்கெனவே 95 மீன்பிடி படகுகளும், 11 மீனவர்களும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் 12 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டதில் வெளியுறவுத் துறை அமைச்சகம் எடுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகள் வாயிலாக தீவிர முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

******

## PRESS RELEASE

**Text of D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru.M.K.Stalin to the Hon'ble Union Minister of External Affairs Dr. S. Jaisankar request to take earnest efforts through diplomatic channels for the release of the arrested fishermen and their fishing boats at the earliest.**

This is to bring to your attention the arrest of eight Indian fishermen belonging to Pudukottai District, Tamil Nadu and their mechanized fishing boat bearing Registration No: IND-TN-08-MM-346 on 20.09.2022 by the Sri Lankan Navy. Apart from the above-mechanized boat, 95 fishing boats and eleven fishermen are still under the custody of the Sri Lankan Government.

While expressing my gratitude for the concerted efforts of the Ministry of External Affairs, in securing the release of 12 Tamil Nadu fishermen, I request you to take earnest efforts through diplomatic channels for the release of the arrested fishermen and their fishing boats at the earliest.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in